1973 நவம்பர் 24]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மக்காச்சோளம் (மெய்ஸ்) பயிருக்கு நிலத்தை உழுது பண்படுத்த "மிட்சுபிஷி" என்கிற ஜப்பான் பவர் டில்லரை பயன்படுத்திப் பார்த்து அதனால் நல்ல பலன் கிடைக்கிறது என்பது உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

திரு. ரா. ரா. முனுசாமி: மக்காச் சோளத்திற்கு நிலத்தைப் பயன்படுத்த ஜப்பான் பவர் டில்லர் நல்ல பலன் அளிக்கிறது என்று சொன்னார்கள். அதேபோல தமிழ்நாட்டில் இருக்கிற விவசாயிகளுக்கு ஒரு ஏக்கரா இரண்டு ஏக்கரா நிலத்தைச் சொந்தமாக வைத்துக் கொண்டிருக்கிறவர்களுக்கு பயன்படக்கூடிய சின்னக் கருவிகளை, உழுவதற்கும், மற்ற காரியங்களுக்கும் பயன்படுத்த, கண்டுபிடித்து வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: பவர் டில்லர் என்பது சிறிய கருவிதான். உழுவதற்குப் பயன்படுவது. ஆனால் அதுகூட மக்களால் பெரிதும் விரும்பி வாங்கப்படுவதில்லை. காரணம், படித்தவர்கள் அதில் உட்கார்ந்து அதனைச் செலுத்த வசதியில்லாததுதான். நம் விவசாயத் துறை அலுவலர் ஜப்பான் சென்றிருக்கிறார். ஜப்பானுக்கு சென்று அங்கே மினி டிராக்டர் என்பதாக உள்ள சின்ன டிராக்டரில் உட்கார்ந்து செலுத்தும் அமைப்புடன் கூடிய அதை இங்கே அக்ரோ இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலமாக தயாரிக்க, வாய்ப்பு வசதிகளைக் கண்டறியச் செய்திருக்கிறோம்.

Tractor Training Centre

* 379. THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether any request has been made to the Union Minister for Food to open a Tractor Training Centre at Kudumiamalai Research Centre about May, 1973; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) & (இ) மூன்றாவது டிராக்டர் பயிற்சி நிலையத்தை நிறுவ மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது. குடுமியாமலை அரசு விதைப்பண்ணை அல்லது அதனை அடுத்த காட்டுப் பகுதியில் இருந்து 400 ஏக்கரா நிலத்தை

இந்திய அரசுக்கு வழங்கவும், ஏனைய வசதிகளைச் செய்து கொடுக்கவும் இந்த அரசு ஒப்புக்கொண்டுள்ளது. இதுகுறித்து இந்திய அரசு இறுதி முடிவு எடுக்கவில்லை.

திரு. கே. கந்தசாமி : டிராக்டர்கள் பற்றி ரிசர்ச் செய்வதை நான் பாராட்டுகிறேன். இப்போதுள்ள டிராக்டர்கள் நமது மாநில அரசால் சரிவர செயல்படுத்தப்படவில்லை, அவைகள் விவசாயி களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய நிலையில் இல்லை என்பது ஏற்கனவே அரசுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அது சம்பந்த மாக விரைவுபடுத்தி, அதன் செலவை சிக்கனமானதாக ஆக்க முயற்சி எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, டிராக்டர்கள் செலவைக் குறைக்கச் சொல்கிறார்களா? அல்லது டிராக்டர்கள் பழுது பட்டால் உடனடியாக ரிப்பேர் செய்து தரும் வசதிகளைப்பற்றிக் கேட்கிறார்களா என்று தெரியவில்லை.

திரு கே. கந்தசாமி : இருக்கிற டிராக்டர்கள் சரியாகச் செயல் படவில்லை. பழுது பார்க்க ஏற்பாடுகள் செய்திருப்பதாக மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் சென்ற கூட்டத் தொடரிலேயே அறிவித்தார்கள். நீண்ட நாட்களாக அவை பயன் படாமல் இருப்பதைத் தவிர்க்க உடனடியாக ரிப்பேர் செய்து தருவதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : டிராக்டர் வொர்க்ஷாப் ஏற்படுத்தி, அதற்கான கருவிகளை அமைப்பதற்கு பலமாதங்கள் பிடிக்கின்றன. டிராக்டர்கள் பழுது பார்க்கும் நிறுவனங்களை ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்க ஏற்பாடுகள் நடக்கின்றன.

திரு. கு. காமாட்சி : வேளாண்மையில் சிறந்து நிற்கும் குடுமியாமலை அண்ணா பண்ணையில் விவசாயக் கல்லூரி ஒன்றைத் திறப்பதற்கு சர்க்காரிடம் செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தற்சமயம் அப்படிப் பட்ட கல்லூரி ஒன்று அண்ணா பண்ணையில் திறக்கப்படுவதற்கான செயற்குறிப்பு எதுவும் இல்லை என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1973 நவம்பர் 24]

திரு. சோ. அழகர்சாமி : அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 400 ஏக்கரா நிலம் மத்திய சர்க்காருக்குக் கொடுப்பதாக யோசனை இருப்பதுபற்றிச் சொன்னார்கள். தற்போது அரசாங்க விதைப் பண்ணைகளே இருக்கின்றன. அந்த விதைப்பண்ணைகள் மூலமாக ஹைப்ரீட் சோளம் போன்ற தானிய விதைகளைக் கொடுக்க முடியாதா? தனியாரிடம் 2 ரூபாய்க்கு வாங்கி 8 ரூபாய்க்கு விற்கிறார்கள். தனியார் விதைகள் தரமாகவும் இருப்பதில்லை. அரசாங்க விதைப்பண்ணைகளில் இருந்தே ஹைப்ரீட் விதைகளை வழங்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இப்போது அரசாங்கத்திடம் 55 பண்ணைகள் இருக்கின்றன. அவைகள் நல்ல விதமாகச் செயல்படுகின்றன. அவைகளில் உற்பத்தியாகிற விதைகளும் விநியோகிக்கப்படுகின்றன. இவை போதுமான அளவில் இல்லாததால் தனியாரிடம் இருந்தும் வாங்கி விநியோகிக் கப்படுகிறது. விரைவில் அரசே எல்லாவற்றையும் விநியோகிக்கிற அளவு விதைப்பண்ணைகளை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு இருக்கிறது. அதோடு Seed கார்ப்பரேஷன் என்று தொடங்கி அவை மூலமாக இதை நடத்தலாம் என்பதும் யோசனையில் இருக்கிறது. 55 பண்ணைகளில் 48 பண்ணைகள் இப்போது நல்ல வருமானத்தோடு ஓடுகின்றன.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : இந்த விதைகள் விவசாயிகளுக்கு வழங்குகிற நேரத்தில் கலப்பு விதைகள் கலந்து விடுகிறதென்று புகார் அரசுக்கு வந்திருக்கிறதா? அதைத் தவிர்க்க ஒவ்வொரு மாவட்டத்திலும் அரசு விதைப்பண்ணைகளை ஏற்படுத்தி சுத்தமான விதை வழங்க சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஒவ்வொரு மாவட்டத்திலும் விதைப் பண்ணை இருக்கிறது. தனியார் மூலம் சேகரிக்கப்படுகிற விதைகள் தரமாக இல்லை என்பது உண்மை தான். அதன்மீது நடவடிக்கையும் எடுக்கப்படுகிறது. சீட் சர்டிபிகேட் வாங்கும் நிலையும் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி டிராக்டர் ட்ரெயினிங் சென்டரைப்பற்றியது. துணை வினாக்கள் விதைகளைப் பற்றிப் போய் விட்டது. அடுத்த கேள்வி 380.